


**17. 09. 2025**

**தலைப்பு செய்திகள்**

- தேச வளர்ச்சியின் அடித்தளமாக மகளிர் சக்தி உருவெடுத்துள்ளதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

- குடியரசு தலைவர், குடியரசு துணை தலைவர் உள்ளிட்டோர் பிரதமரின் 75ஆவது பிறந்த தினத்தை ஒட்டி வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

- சரக்கு சேவை வரி சீர்திருத்தங்களால் பொதுமக்கள் இரண்டு லட்சம் கோடி ரூபாய் வரை சேமிக்கலாம் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

- பெரியார் ஈ.வெ.ராமசாமியின் 147ஆவது பிறந்த நாளை முன்னிட்டு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தலைமையில் சமூக நீதிநாள் உறுதி மொழி திருச்சியில் இன்று ஏற்கப்பட்டது.

- சண்டிகடில் ஆஸ்திரேலியாவிற்கு எதிரான 2ஆவது ஒருநாள் சர்வதேச மகளிர் கிரிக்கெட் போட்டியில் இந்தியா முதலில் பேட் செய்கிறது.

**இனி விரிவான செய்திகள்**

***********

**பிரதமர் - மத்திய பிரதேசம்**

வளர்ச்சி அடைந்த பாரத பாதையின் நான்கு முக்கிய தூண்களாக பெண்கள், இளையோர், ஏழை எளியோர் விவசாயிகள் திகழ்வதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

மத்திய பிரதேச மாநிலம் தார் மாவட்டத்தில் 8ஆவது தேசிய ஊட்டசத்து மாத இயக்கத்தை இன்று தொடங்கிவைத்து பேசிய அவர், தேச வளர்ச்சியின் அடித்தளமாக மகளிர் சக்தி உருவெடுத்துள்ளதாக குறிப்பிட்டார்.

தாய்மார்கள் ஆரோக்கியமாக இருந்தால் ஒட்டுமொத்த இல்லமும் வளமாக இருக்கும் என்று எடுத்துரைத்த பிரதமர், இவர்தம் ஆரோக்கியத்தை மேம்படுத்தி வலுப்படுத்தும் சுகாதார இயக்கமும் இன்று தொடங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

இந்த திட்டங்களின் கீழ் 75 ஆயிரம் சுகாதார முகாம்களுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பிரதமர் குறிப்பிட்டார்.

***********

**பிரதமர் பிறந்த தினம்**

பிரதமர் திரு.நரேந்திரமோடியின் 75ஆவது பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி,

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு,

குடியரசு துணை தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன்,

மத்திய அமைச்சர்கள், மக்களவை எதிர்கட்சி தலைவர் திரு.ராகுல்காந்தி உள்ளிட்டோர் பிரதமருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப், ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டின் உள்ளிட்ட பல நாடுகளின் தலைவர்களும் பிரதமருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

தமிழக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின், அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமியும் பிரதமருக்கு நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டுள்ளனர்.

பிரதமரின் பிறந்த நாளை ஒட்டி நாடுமுழுவதும் சிறப்பு ரத்த தான முகாமிற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

இதனிடையே செங்கல்பட்டு தனியார் கல்லூரியில் ரத்த தான முகாமை மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் இன்று தொடங்கிவைத்தார்.

நாமக்கல் மாவட்டம் வடுகம், ராசிபுரம், கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் உள்ளிட்ட இடங்களில் பிஜேபி சார்பில் பல்வேறு நலதிட்ட உதவிகள் இன்று வழங்கப்பட்டன.

பிரதமர் திரு.நரேந்திரமோடியின் பிறந்த நாளை ஒட்டி மக்கள் நல திட்டங்கள் குறித்த சிறப்பு விழிப்புணர்வு முகாம்களுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

***********

.. மியூசிக் ..

சேவை, நல்லாட்சி என்ற தாரக மந்திரத்துடன், பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அரசு ஆக்கப்பூர்வமான மாற்றங்களுக்கும், வளர்ச்சிக்கும் அர்பணிப்புடன் செயலாற்றி வருகிறது.

.. மியூசிக் ..

பிரதமரின் 75ஆவது பிறந்த நாள் இன்று கொண்டாடப்படும் நிலையில் ஒரு சாதாரண நிலையிலிருந்து பிரபலமான தலைவராக உருவெடுத்துள்ள பிரதமரின் அரசியல் பயணம் இன்றியமையாதது.

பிரதமரின் தலைமை, பல்வேறு தரப்பினரை ஈர்த்துள்ள நிலையில், அரசியல் மற்றும் அதற்கு அப்பால் அவருடைய தாக்கம் இந்தியாவிலும், உலக நாடுகளிலும் தனி முத்திரையை பதித்துள்ளது.

இன்றைய சிறப்பு நிகழ்வில் பல்துறையை சேர்ந்த பிரபலமானவர்கள் பிரதமரை பற்றி எடுத்துரைக்கின்றனர்.

உலக அளவில் அனைவரையும் கவர்ந்த தலைவராக திகழும் திரு.நரேந்திரமோடி, நாட்டு மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான பல்வேறு பணிகளை செயல்படுத்தி இருப்பதாக, பிரபல திரைப்பட நகைச்சுவை கலைஞரும், கிரிக்கெட் வர்ணனையாளருமான பாஸ்கி, பாராட்டு தெரிவித்துள்ளார்.

.. பாஸ்கி வாய்ஸ் ..

தமிழ்நாடு வாழை உற்பத்தியாளர் கூட்டமைப்பின் பொதுச்செயலாளரும் பிரபல விவசாயுமான அஜித்தன், வேளாண் துறை மேம்பட, மண் பரிசோதனை முதல் நீர் மேலாண்மை வரை விளைச்சலுக்கான காரணிகளை தொலைநோக்கு பார்வையுடன் பிரதமர் முன்னெடுத்து சென்றார் என்று கூறுகிறார்.

.. அஜித்தன் வாய்ஸ் ..

நாட்டில் கடந்த 11 ஆண்டுகளில் டிஜிட்டல் புரட்சி ஏற்பட்டதை சுட்டிக்காட்டிய கட்டமைப்பு துறையின் சிறப்பு வல்லுநரும், தொழில்முனைவோருமான திரு.லோகநாதன் வளர்ச்சி அடைந்த இந்தியாவிற்கான பங்களிப்பில் நாட்டு மக்கள் அனைவரும் பங்கேற்பதற்கான பிரதமரின் விருப்பத்தை எடுத்துரைத்தார்.

.. லோகநாதன் வாய்ஸ் ..

நாட்டின் எதிர்காலத்திற்கான பிரதமரின் தொலைநோக்கு பார்வை, தன்னம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளதோடு கனவுகளுக்கு மறுவடிவத்தையும் உருவாக்கியுள்ளது.

.. மியூசிக் ..

***********

நிர்மலா சீதாராமன்

சரக்கு சேவை வரி சீர்திருத்தங்கள் மூலம் பல்வேறு வரிகள் குறைந்து இரண்டு லட்சம் கோடி ரூபாய் வரை பணம் சேமிக்க வழிகோலும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

ஆந்திர மாநிலம் விசாக பட்டிணத்தில் GST விளக்க கூட்டத்தில் இன்று உரையாற்றிய அமைச்சர் வரி சீர்திருத்தங்களால் விவசாயிகளின் வருவாய் பெருகுவதோடு, வேளாண் உபகரணங்களின் விலை குறைந்து நவீன பண்ணை திட்டங்களை செயல்படுத்த முடியும் என்று குறிப்பிட்டார்.

சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்கள், வேலை உருவாக்கும் மையங்களில் வாய்ப்புகள் அதிகரிக்கும் என்று கூறிய அவர் வாங்கும் திறனை அதிகரித்து சாமானிய மக்களின் பண சேமிப்பிற்கு உதவும் என்றார்.

வரும் 22 ஆம் தேதி நடைமுறைக்கு வர உள்ள சரக்கு வரி சீர்திருத்தங்களால் நாட்டின் வரி கட்டமைப்பு இலகுவாவதோடு, பொருளாதார வளர்ச்சி மேம்படும் என்றும் எடுத்துரைத்தார்.

வரி சீர்திருத்தங்கள் ஒவ்வொரு குடிமகனுக்கும், ஆளுமை வழங்கி பொருளாதாரத்தை முன்னேற்றப்பாதையில் கொண்டு செல்லும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இதனிடையே கட்டுமான துறையில் சிமெண்ட்டிற்கான வரி 28 சதவிகிதத்திலிருந்து 18 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது குறித்து தூத்துக்குடியை சேர்ந்த பொறியாளர் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

வாய்ஸ்

வாகனங்களுக்கான வரி குறைப்பு பயனளிக்கும் என்று நாகையிலிருந்து பெண் ஒருவர் தெரிவிக்கையில்:

வாய்ஸ்

***********

**பெரியார் - முதலமைச்சர்**

பெரியார் ஈ.வெ.ராமசாமியின் 147ஆவது பிறந்த நாள் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி திருச்சி மத்திய பேருந்து நிலையத்தில் அவரது திருவுருவ படத்திற்கு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று, மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் முதலமைச்சர் தலைமையில் சமூக நீதி நாள் உறுதிமொழி ஏற்கப்பட்டது.

அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும் சமூக நீதி நாள் உறுதிமொழி ஏற்கப்பட்டது.

ஈ.வெ.ரா பிறந்த இடமான ஈரோட்டில் அவரது நினைவகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கந்தசாமி மாலைஅணிவித்து மரியாதை செலுத்தினார்.

***********

**நீதிமன்றம்**

தமிழ்நாட்டில் டாஸ்மாக் முறைகேடுகள் தொடர்பான வழக்கில் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளதாக அமலாக்கத்துறை சென்னை உயர்நீதிமன்றத்தில் இன்று தெரிவித்துள்ளது.

இவ்வழக்கில் தொடர்புடையவர்களுக்கு எதிராக மேல் நடவடிக்கை எடுக்க சென்னை உயர்நீதிமன்றம் இடைக்கால தடை விதித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

***********

**மத்திய அரசு – நிதி விடுவிப்பு**

தமிழகம் மற்றும் அஸ்ஸாம் மாநிலங்களின் ஊரக உள்ளாட்சி பகுதி மேம்பாட்டிற்காக 15ஆவது நிதி ஆணைய மானியத்தின் கீழ் மத்திய அரசு 342 கோடி ரூபாயை இன்று விடுவித்துள்ளது.

தமிழகத்திற்கு நடப்பு நிதியாண்டில் முதல் தவணையாக 127 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள மத்திய பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம், குடிநீர் விநியோகம், மழை நீர் சேகரிப்பு, நீர் சுத்திகரிப்பு, சுகாதார சேவைகள், திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்காக இந்த நிதி அனுமதிக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளது.

அஸ்ஸாம் மாநில ஊரக மேம்பாட்டு பணிகளுக்கு 214 கோடி ரூபாய்க்கும் அதிகமான தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

***********

**தங்கம் தென்னரசு**

தமிழகத்தில் அரசு பள்ளிகளின் தரம் மேம்பட்டுள்ளதாக மாநில நிதியமைச்சர் திரு.தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

விருதுநகரில் ஆறுகோடியே 13 லட்சம் ரூபாய் மதிப்பில் புதிய வகுப்பறை கட்டிடங்களை இன்று திறந்துவைத்து பேசிய அவர், அரசு பள்ளிகளில் மாணாக்கரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக கூறினார்.

***********

**கிரிக்கெட்**

சண்டிகடில் ஆஸ்திரேலியாவிற்கு எதிரான 2ஆவது ஒருநாள் சர்வதேச மகளிர் கிரிக்கெட் போட்டியில் முதலில் பேட் செய்யும் இந்தியா சற்று முன் 7 ஓவரில் விக்கெட் இழப்பின்றி 45 ரன் எடுத்துள்ளது.

ஐ.சி.சி மகளிர் ஒருநாள் உலக கோப்பை போட்டி வரும் 30ஆம் தேதி தொடங்க உள்ள நிலையில் இந்த தொடர் முக்கியத்துவம் பெறுகிறது.

***********

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**